1097

1097

போதனை விஷய பூங்கொத்து

மாதமொருமுறை மலரும்.

... OF THE REGISTRAR OF ...
20 JUN 1941
MADRAS

Editor & Publisher :

Rev. Fr. A. LOURDUSWAMI, B.A., L.T.,

R. C. Secondary Training School, Trichinopoly.

கோத்... 15 ஜூன் 1941 மலர் 12

...ற பாடசாலை, திருச்சினுப்பள்ளி.

தனிப்பிரதி அணு 1½.

BODHANA VISHAYA POONGOTHU

Magazine
of
Educational Topics & School Methods.

பொருளடக்கம்

பக்கம்

1. பத்திராதிபர் குறிப்புகள் 313
2. சென்னை கல்வி இலாகா—சுற்றுத்தரவுகள் ... 315
3. Result of the T.S.L.C. Examination ... 319
4. Imagination (கற்பனாசக்தி) 321
5. அறநெறித்தொடர் 325
6. கிருஷிகனும் கிராம ஆசிரியரும் 327
7. பாடக் குறிப்பு 330
8. யோசனைக் கணக்கு 332
9. ஒன்றுமில்லை 333
10. வைத்தியமும் ஆரோக்கியமும் 336
11. பாலர் பகுதி 338
12. சில பழமொழிகள் 340
13. பழைய மாணவிகளின் சங்கத் திறப்புவிழா ... 341
14. பெற்றோர் சங்கம் 341
15. இப்படியாக் கோழிக்குஞ்சு 343

Imprimatur: ✠ JAMES,
Bishop of Trichinopoly.

Rates of Advertisement

PERIOD	HALF PAGE			FULL PAGE		
	Rs.	As.	Ps.	Rs.	As.	Ps.
1 Month	4	0	0	7	8	0
3 Months	11	0	0	20	0	0
6 Months	20	0	0	35	0	0
1 Year (11 Issues) ...	30	0	0	55	0	0

Editor & Publisher:
"BODHANA VISHAYA POONGOTHU" Trichinopoly.

ஏஜெண்டுகள் தேவை! ஏஜெண்டுகள் தேவை!!

போதனை விஷயப் பூங்கொத்து

கொத்து **31**] **15 ஜூன் 1941** [மலர் **12**

பத்திராதிபர் குறிப்புகள்

T. S. L. C. பரீட்சை 1941 (செக்கண்டரி கிரேடு) சென்ற மார்ச்சு மாதம் நடைபெற்ற T. S. L. C. செக்கண்டரி கிரேடு பரீட்சையில் நமது மாணவர்களின் தேர்ச்சி விவரம் மற்றோரிடத்தில் காண்க. இவ்வருஷமும் நமது பாடசாலைக்கு வெகு நல்ல தேர்ச்சி சத விகிதம் கிடைத்ததைப்பற்றி சர்வேசுரனுக்கு நன்றி செலுத்துவதோடு, தேறிய மாணவர்கட்கும் வாழ்த்துதல் கூறுகிறோம். தேறத்தவறிய சிற்சில மாணவர்கள் ஒன்று அல்லது இரண்டு பாடங்களில்மட்டும் தவறினார்களேயொழிய, ஒருவராவது எல்லாப் பாடங்களிலும் தவறவில்லையென்பது பாராட்டத் தகுந்தது.

பழைய மாணவர்கட்கு அறிக்கை. 1940-ல் இப்பாடசாலையைவிட்டுச் சென்ற நம் பழைய மாணவர்களது **பூங்கொத்து** சந்தா, இந்த ஜூன் மாதத்தோடு சரியாய்ப் போய்விடுகிறபடியால், ஜூலை மாதத்தில் தொடங்கும் புதுக் கொத்திலிருந்து தத்தம் சந்தாக்களைப் புதுப்பித்துக்கொள்ளும்படி ஞாபகப்படுத்துகிறோம். அன்றியும் அவர்கள் நம்மிடம் வாக்களித்துள்ளபடி,

தாய்ப்பாடசாலைமட்டில் தங்களுள்ள அன்பையும் ஆதரவையும் தொடர்ந்து காட்ட, பூங்கொத்து சந்தாவைப் புதிப்பித்துக் கொள்வதே போதிய சான்றுமே!

இச்சந்தர்ப்பத்தில், ஏனைய பழைய மாணவர்களும், நமது பூங்கொத்து நேயர்களும் தத்தம் சந்தாக்களை ஏற்றபடி புதிப்பித்துக்கொள்ளுவர் என நம்பியிருக்கின்றோம்.

* * *

அதி. சங். **அமலோற்பவநாதர் சுவாமியவர்களின் மரணம்.** சங். அமலோற்பவநாதர் சென்ற மே-மீ 25-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை மரணமடைந்தனர். இப்பாடசாலைத் தலைமையாசிரியராக மூவாண்டு (1911—1913) இருந்து இப்பாடசாலையின் முன்னேற்றத்திற்காக வெகுவாய் உழைத்தவர். பின்னர், தூத்துக்குடி, மதுரை இவ்வூர் உயர்தரப் பாடசாலைகளில் பல வருஷங்கள் திறமைவாய்ந்த தலைமையாசிரியராக உழைத்தவர். அப்பால் மதுரை ஜில்லா சேசு சபை சிரேஷ்டராக 1937-ம் வருஷத்தில் நியமனம் பெற்றவர். இன்னும் இவரது அரிய பெரிய சேவைகளையெல்லாம் ஈண்டு எடுத்துக்கூற இயலாமையால், எம்சார்பாகவும் எமது பாடசாலை ஆசிரியர்கள், மாணவர்கள் சார்பாகவும் எமது முழு அனுதாபத்தையும், நமது பூங்கொத்து வாயிலாகத் தெரிவித்துக்கொள்ளுவதுடன் காலஞ்சென்ற அந்த நல்ல குருவானவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக மிகவும் வேண்டிக்கொள்ளுகின்றோம்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
182457
சென்னை-600 008

20 JUN 1941

சென்னை கல்வி இலாகா திருத்த விதிகள், சுற்றுத்தரவுகள்

R. C. No. 35, B-41, dated 21-2-'41. கல்வி டைரக்டரது இந்த உத்தரவின்படி, யாதாம் ஒரு பாடசாலையானது ஓர் முழுப்பாடசாலையாக, (5 வகுப்புகள் கொண்டது) உயரவேண்டியிருந்தால், அத்தகைய பாடசாலைகளுக்கு (ஏற்கனவே அப்பாடசாலைகளில் IV, V வகுப்புகள் இல்லாவிடினும்) முழுப் பாடசாலைக்குரிய அங்கீகாரம் அளிக்கப்படும்.

* * *

Amendment to Rules relating to Provident Fund for Teachers in non-Pensionable Service

Fort St. George, April 21, 1941 (G. O. Ms. No. 612. Ed.)

விதி 6 (c) க்குப் பிறகு பின் வருவதைச் சேர்த்துக்கொள்ளவும்.

ஒரு பாடசாலையில் வேலைசெய்யும் ஒரு ஆசிரியரின் பொருட்டு, அவர் செலுத்தவேண்டிய பிராவிடெண்டு பண்டு விகிதங்கள் சிலகாலம் அவரால் செலுத்தப்படவில்லையானால், கல்வி டைரெக்டர், சரியான காரணங்களின்பேரில் அவ்வாறு செலுத்தப்படாத காலத்துக்குரிய ஷை விகிதத் தொகையைச் செலுத்தத் தேவையில்லையெனத் தள்ளுபடி செய்துவிடலாம்.

* * *

E. S. L. C. Examination

ஹையர் எலிமேண்டரி பாடசாலைகளின் **VIII**-வது வகுப்பு முடிவில் ஸர்க்கார் பரீட்சை. ஷை பரீட்சையைப்பற்றி நமது அக்டோபர் 1940 பூங்கொத்து மலரில் பொதுவாய்க் கூறியிருந்தோம். ஆனால் ஷை பரீட்சையின் முழு விவரம் பின் வருமாறு :—Vide Letter R. C. No. 35 C/41 dated 7-4-1941 from the Secretary to the Commissioner for Govt. Examinations.

1. பிரதிவருஷம் ஏப்ரல் மாதத்தில் ஷை பரீட்சை நடத்தப்படும். பரீட்சை நடக்கும் இடம் (ஸெண்டர்) அந்தந்த ப்ரதேச கல்வி அதிகாரிகளின் மூலமாய்த் தெரிவிக்கப்படும்.

2. அங்கீகாரமாயுள்ள ஹையர் எலிமெண்டரி பாடசாலைகளின் தலைமை ஆசிரியர்கள் தத்தம் பாடசாலையிலிருந்து ஷை பரீட்சை எழுதவேண்டிய மாணுக்கர்களின் பெயர் முதலிய விவரங்களடங்கிய ஜாபிதாவை ஜனவரி மாதத்தில் அனுப்பிவிட வேண்டும்.

3. பரீட்சை எழுதும் ஒவ்வொரு மாணுக்கனுக்கும் ரூ. 1–8–0 வீதம் கட்டணம் செலுத்தியே ஷை பரீட்சை அப்ளிகேஷனை அனுப்பத்தகும்.

4. பின்வரும் பாடங்களில் பரீட்சை நடத்தப்படும். (1) பாஷை. (2) கணிதம். (3) சரித்திரம், பூகோளம், அரசியல் (Civics).

பாஷை பாடங்களுக்கென, டெக்ஸ்ட் புத்தகங்கள் (Text-books) அரசாங்கத்தாரால் பிரசுரிக்கப்பட்டுள்ளன. மற்றப் பாடங்களில் “ஸிலபஸ்” படி பரீட்சை நடைபெறும்.

ஷை ஒவ்வொரு பாடத்திற்கும் பரீட்சை எழுதவேண்டிய நேரம் 2 மணி; மார்க்கு 100. ஷை பரீட்சையில் **பாஸ்** செய்ய குறைந்தபட்சம், பாஷைப்பாடத்தில் 35 சத வீதமும், ஏனைய இரண்டு பாடங்கள் ஒவ்வொன்றிலும் 30 சத வீதமும் மார்க்கு வாங்கினல் பரீட்சையில் தேறினதாகக் கருதப்படும்.

5. ஷை பரீட்சையில் தேறினவர்களுடைய பெயர்கள் Fort St. George Gazette-ல் பிரசுரிக்கப்படும். தேறினவர்களுக்கு **ஸர்ட்டிபிக்கேட்** அந்தந்தத் தலைமை ஆசிரியர் மூலமாய் அளிக்கப்படும்.

6. VIII வகுப்பில், பாடசாலை நாட்களில் ஒவ்வொரு பரீட்சை எழுதும் மாணுக்கனும் 75% ஆஜராகியிருக்கவேண்டும். அதாவது அந்தந்த வருஷம் மார்ச் 31-ம் தேதிக்குள், மொத்த பாடசாலை ஆஜர் நாட்களில் 75% மாணுக்கன் ஆஜராயிராவிடில் பரீட்சை எழுத அனுமதி இல்லை என்பதாம்.

7. இவ்வாறு ஷை பரீட்சை எழுதி, அதில் தவறிப்போனவர்கள், மீண்டும் மறு வருஷம் “ப்ரைவேட்” மாணவனக

அப்ளிகேஷன்போட்டு ஷை பரீட்சை எழுதலாம். VIII வகுப்பில் மீண்டும் சேர்ந்து படிக்கவோ, 75% ஆஜர் நாட்கள் பார்க்கவோ தேவை இல்லை. அதாவது "Private" மாணவராக பரீட்சை எழுதித்தேறலாம்.

* * *

Proceedings of the Director of Public Instruction, Madras

(R. O. C. No. 4724. B/38 dated 16th April 1941.)

ஷை உத்தரவின்படி, ஆசிரியர்களின் **ஸேர்விஸ் ரெஜிஸ்டர்** (Teachers' Service Register) 3-ம் பக்கத்தில், 10-ம் காலத்திற்கு (Column) அடுத்தாற்போல் 11-ம் காலம் ஒன்று புதிதாக ஏற்படுத்தி, அதில் "ஆசிரியரது கையொப்பம்" (Signature of the Teacher) என அமைத்து, அதன்கீழ் ஆசிரியர் தமது கையொப்பத்தை இடவேண்டியது அவசியமாகும். ஷை 11-ம் காலத்தையடுத்து 12, 13, 14-ம் காலங்கள் முறையே அமையவேண்டும்.

இனி புதிதாக அச்சடிக்கப்படும் ஸெர்வீஸ் ரெஜிஸ்டர்களில் மேற்கண்டவாறு திருத்தம் ஏற்பட்டு ஷை நெ. காலங்கள் போடப்பட்டிருக்கும். தற்போது வழங்கிவரும் ரெஜிஸ்டர்களில்தான் மேற்கூறியபடி 11-ம் காலம் சேர்க்கவேண்டும்.

எனவே இதுவரை ஷை 11-ம் காலம் ஏற்படாவிடினும் இனி அதை ஏற்படுத்தி அதில் ஆசிரியர் தமது கையொப்பத்தை இடும்படி கல்வி அதிகாரிகள் வற்புறுத்துவார்கள்.

இந்த உத்தரவின் முக்கிய நோக்கம் என்னவெனின், ஆசிரியருக்கும் அவரது பாடசாலை மானேஜருக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தம் (Service Condition) இன்னதென்பதை ஆசிரியர் அறிந்து, அதனை ஏற்றுக்கொண்டதற்கு அத்தாட்சியாக அவரது கையொப்பம் இடப்பட்டிருக்கவேண்டுமென்பதே.

ஆகவே, ஏற்கனவேயுள்ள ஸெர்வீஸ் ரெஜிஸ்டரில் 2, 3-ம் பக்கங்களில் 11-ம் காலத்தில் மானேஜரது கையொப்பத்திற்குப்

பக்கத்தில் ஆசிரியரது கையொப்பமும் போடப்பட்டிருப்பதைக் கவனித்த பின்னரே, டெப்யூடி இன்ஸ்பெக்டர் தமது கையொப்பத்தை இட்டு அங்கிகரிப்பர் என்பதை அறிக.

* * *

Proceedings of the Director of Public Instruction, Madras

(Dis. No. 1873/41 dated 29-4-1941.)

ஷை உத்திரவின்படி, ஆரம்பப் பாடசாலைகளில் சுருதி ஆர்மோனியம் (Sruthi Harmoniums) வாங்கி உபயோகப்படுத்துவதன் பொருட்டு உபகரண மான்யம் Equipment Grant அளிக்கப்படும்.

எலிமெண்டரி பாடசாலைகளுக்கு ஏற்ற சங்கீத பாட புத்தகங்கள்.

1. பாலசங்கீத வாசகம் முதல் 3 வகுப்பு மாணவர்களுக்கு	...	0—4—6
2. பாலசங்கீத வாசகம் ஆசிரியர்களுக்கு	...	0—6—6
3. கர்னாடக சங்கீத போதினி (முதல்பாகம்) ஆசிரியர்களுக்கு	...	0—6—0
4. கர்னாடக சங்கீத போதினி (2-ம் பாகம்) 1 முதல் 5 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு	...	0—6—0
5. கர்னாடக சங்கீத போதினி (3-ம் பாகம்) 6 முதல் 8 வகுப்பு கிறீஸ்துவ மாணவர்களுக்கு	...	0—6—0

விலாசம் : **A. GNANADICKAM,**
South Indian Music School,
St. Thomas Church Rd.,
OOTACAMUND.

Results of the T. S. L. C. Examination, March 1941

R. C. Boarding and Training School, Secondary Grade

(*Vide* Supplement to Fort St. George Gazette D-27th May 1941)

PASSES

Reg. No.	Name of Candidate	Percentage
8707	J. Jesuadien Cardoza ...	48
8708	V. M. Maria Arul	52
8709	T. Rajendram	43
8710	A. Rajaiah Raja Ratnam ...	36
8711	A. Maria Susai Michael ...	39
8712	S. G. Doraiswami	34
8713	P. Pakkiriswami	43
8716	G. Arputha Maria Arul ...	41
8718	P. Mudiappan	43
8719	P. Subramanyan	40
8720	A. R. Natarajan	39
8721	M. Rangaswami	43
8722	M. Pappiah	46
8723	K. Adaikalasami	44
8724	I. Durairaj	43
8725	M. Raju	47
8726	S. Sundaram	47
8727	S. Devasahayam	41
8728	T. Amaladoss	89
8729	S. Abdul Khadir	40
8732	G. A. Siluvei Manuel ...	49
8733	M. Rajendram	43
8734	Fedelis Louis Jeyaraj ...	48
8735	M. Joseph	39
8737	D. Jegajothi	35
8738	K. Venkata Rao	50
8739	K. Subramanian, 1938-1940 ...	45
8741	M. Yagoo, 1938-1940 ...	42
8742	T. S. Krishnamurthy, 1939-1940	40

FAILURES

Reg. No.	Name of Candidate	Subject in which failed
8714	K. S. Vasudevan,	Drawing & Blackboard work.
8715	J. Jesudasan,	Organisation & Discipline, and General Principles of Education.
8717	S. Maria Savari,	Drawing & Blackboard work.
8730	R. Bashyam,	General Principles of Education.
8731	T. Y. Mahadevan,	Drawing & Blackboard work.
8736	S. Soosai,	General Principles of Education.
	Old Pupils	
8740	N. Krishnaswami, 1938-40	Drawing & Blackboard work.
8743	M. Subrahmanyan, 1937-1938	General Principles and Drawing.
8744	K. Alagiamanavalan, 1937-1938	General Principles.
8745	S. M. Pasupathy, 1934-35	Methods of Teaching Subjects.

OUR EMPLOYMENT BUREAU

சில பத்து கிராமங்களில் ஹையர் கிரேட் போதனுமுறை பயின்ற உபாத்தியாயர்கள் பாடசாலை வைத்து நடத்தினுல் அங்கீகாரத்திற்கும் திரவிய சகாயத்திற்கும் சிபார்சு செய்யப் படும் என்று லால்குடி ரேஞ்சு டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள் தமது R. C. 139/41 d./20-4-41 சுற்றறிக்கையில் வெளியிட் டிருக்கிறுர்.

* * * *

Wanted immediately a Secondary Grade Trained Teacher in :

St. Mary's H. E. School,

Kolappalur, (Via) Gobi and ERODE.

Apply to the Manager.

* * * *

உடையார்பாளையம் தாலுகாவில் சில 49 கிராமங்களில் பாடசாலைகள் வைத்து நடத்தினுல் சிபார்சு செய்யப்படும் என்று அரியலூர் டிப்டி இன்ஸ்பெக்டர் அவர்கள் தமது R.C. pl. No. 25/1 of 41 d./23-5-1941 சுற்றறிக்கையில் வெளி யிட்டிருக்கிறுர்.

IMAGINATION

கற்பனைசக்தி அல்லது மனோபாவனைசக்தி

(A. D. M. பிரகாசம், B.A., L.T.)

அநேக வருஷங்களுக்குமுன்பு, கற்பனைசக்தியால் ஏற்படக்கூடிய பிரயோசனங்களைப்பற்றி, மனோசாஸ்திரிகளினிடையே அநேக அபிப்பிராயபேதங்களிருந்தன. ஆனால் தற்போதோவெனில், கற்பனைசக்தியினால், கல்விக்குண்டாகும் நன்மைகளை எல்லோரும் உணர்ந்து விட்டனர். இன்பத்தைக் கொடுக்கும் நாவல்களை எழுதுவோருக்கும், சிறந்த கவிராயர்களுக்கும், நூதன விஷயங்களைக் கண்டுபிடிப்பவர்களுக்கும் சங்கீதவித்வான்களுக்கும் ஓவியங்களை எழுதுபவர்களுக்கும் சிற்ப சாஸ்திரிகளுக்கும் பெரிதும் உதவுவது, கற்பனைசக்தி.

கற்பனைசக்தி யென்றால் என்ன? புலன்களில் தோன்றாத பொருள்களின் பிரக்ஞையே கற்பனைசக்தி, என்று கூறலாம். ஒரு பொருளைப் பார்க்கும்போது, பொருளைப்பற்றிய ஒரு உணர்ச்சியேற்படுகின்றது. உணர்ச்சிநரம்புகள் மூலம் பொருளைப்பற்றிய உணர்ச்சி மனதிற்கு, எடுத்துச் செல்லப்படுகின்றது. தற்போது மனதின்கண் ஏற்பட்ட உணர்ச்சி மனதின்கண் முன்பே சேர்க்கப்பட்டிருக்கும். முன் அனுபவத்தோடு இணைக்கப்பட்டு இந்திரிய ஞானம் ஏற்படுகின்றது. பொருள் ஆஜராயில்லாத போது இப்பொருளை நம் சுயமுயற்சியால் நினைக்கும்போது, முன். பார்த்த பொருளின் ரூபிகரம் மனதின்கண் ஏற்படுகின்றது. இப்படியேற்படும் பொருளின் ரூபிகரத்தை, அப்படியே மாற்றாமல் நினைத்தாலும்சரி, வெளியிட்டாலும்சரி, அதை, திருப்பிச் சொல்லும் கற்பனைசக்தி அல்லது ஞாபகம் என்று சொல்லுகின்றோம். நமது சுய முயற்சியினால் மனதின்முன் கொண்டுவரப்பட்ட ரூபிகரத்துடன், புதிய விஷயங்களைச் சேர்க்கும்போது மனதின்கண் முன்னாடியேயுள்ள ரூபிகரம் மாற்றப்பட்டு, திருத்தியமைக்கப்படுகின்றது. புதிய விஷயங்கள் அதிகம் பிரயோகிக்கப்படாவிடினும், பழய விஷயங்கள் சேர்க்கப்படும் விதத்திலிருந்து அது புதிய கருத்தாகவே தோன்றுகின்றது. இந்த விதமான கற்பனைசக்தியைத்தான் உற்பத்தி செய்யப்பட்ட கற்பனைசக்தி (Productive imagination) என்றழைக்கின்றோம். பொதுவாக, கற்பனைசக்தி என்று சொல்லும்போது உற்பத்தி செய்யப்பட்ட கற்பனைசக்தியைத்தான் பொருட்படுத்துகின்றோம்.

கற்பனுசக்தி யென்பதை இப்போது ஒரு உதாரணத்தால் விளக்கிக் காட்டலாம். ஆரம்பப் பாடசாலை ஆசிரியர் ஒருவர் உல்லாசப் பிரயாணமாக, தன் மாணவர்களை, வெள்ளம் அதிகமாய்ப் போகும் ஆடிமாதத்தில் காவேரியாற்றிற்கு அழைத்துச் செல்லுகிறார். காவேரியாற்றின் ஒரு கரையில் நின்றுகொண்டு மற்றொரு கரையைப் பார்க்கின்றனர். காற்று வீசுவதினாலேற் படக் கூடிய அலைகளைக் கவனிக்கின்றனர். ஒரு கரையிலிருந்து மற்றொரு கரைக்கு படகுகள் மூலமாய் ஜனங்கள் போவதைக் கவனிக்கின்றனர். வெள்ளம் கரைபுரண்டு போகும்போது பெரிய கெண்டை மீன்கள் துள்ளிக் குதிப்பதையும் பார்க்கின்றனர். செம்படவர்கள் வலைவீசி மீன் பிடிப்பதையும் பார்க்கின்றனர். உல்லாசப் பிரயாணத்தில் இம்மாதிரியாக அநேக விஷயங்களைப் பார்த்த பிறகு மாணவர்களும் ஆசிரியரும் திரும்பி வருகின்றனர். அடுத்த நாள் மாணவர்கள் வகுப்பிற்கு வந்தவுடன், உல்லாசப் பிரயாணத்தில் கவனித்துவந்த விஷயங்களை மாணவர்களிடமிருந்து ஆசிரியர் வருவிக்கின்றார். மாணவர்களும் ஆற்றங் கரையில் அவர்கள் பார்த்த ஒவ்வொரு விஷயத்தையும், தங்கள் முயற்சியினால் ரூபிகரம் செய்து, பார்த்த விஷயங்களை அப்படியே வெளிப் படுத்துகின்றனர். இப்போது மாணவர்களின் மனமானது ஞாபகத்திற்குரிய செயலைச் செய்தது என்கிறோம். இதைத்தான் "திருப்பிச் சொல்லும் கற்பனுசக்தி" என்று மனோசாஸ்திரிகள் அழைக்கின்றனர். மாணவர்கள் பார்த்து வந்த காவேரி யாற்றைப் பற்றிய விஷயங்களை அடிப்படையாகக் கொண்டு ஆசிரியர் "சமுத்திரத்தின்" கருத்தை பிள்ளைகளிடம் ஏற்படுத்த முயற்சிக்கின்றார். ஆற்றிலேற்படும் அலைகளைக்காட்டிலும் பன்மடங்கு அதிகமாய் அலைகள் ஏற்படக்கூடிய நீர்பாகத்தைப் பற்றியும், ஒரு கரையிலிருந்து மற்றொரு கரையைக் காணக் கூடாததுமான ஒரு நீர் பாகத்தையும், ஆற்றில் காணக்கூடிய மீன்களைக்காட்டிலும், அநேக மடங்கு பெரிதான மீன்கள் நிறைந்துள்ள பெரிய நீர்ப்பாகத்தையும், ஆற்றைக்கடக்கக் கூடிய படகுகளைக் காட்டிலும் பன்மடங்கு பெரிதான கப்பல்கள் செல்லும் பெரிய நீர்ப்பாகத்தையும்பற்றி ஆசிரியர் பேசுகிறார். காவேரி யாற்றின் அனுபவத்திலிருந்து "கடலின்" கருத்தை ஆசிரியர் மாணவர்களுக்கு உண்டாக்குகிறார். இந்த விதமான கற்பனுசக்தியைத்தான் "உற்பத்தி செய்யப்பட்ட கற்பனு சக்தி" என்கிறோம்.

மனிதவாழ்க்கையின் பிரிவுக் கேற்றவாறு கற்பனுசக்தியை மூன்று பிரிவாகப் பிரிக்கலாம். குழந்தைப் பருவத்தில் காணும், உண்மையற்றதும் கைகூடாததுமான கற்பனுசக்தி முதல் வகை

பாகும். இக்கற்பனுசக்தியை, பிள்ளைகளின் "மனேராஜ்யம்" என்றும் சொல்லுவார்கள். இல்லாதவற்றை இருப்பதுபோல் மனேபாவனை செய்துகொண்டு குழந்தைகள் விளையாடுகின்றனர். இந்தப் பருவத்தில்தான் குழந்தைகள் பெரிதும் கற்பனை விளையாட்டுகளில் ஈடுபடுகின்றனர். பொம்மையையும், கல்லையும், குடையையும், கோலையும் உயிருள்ள பிராணிகளாக மதித்து விளையாடுகின்றனர். குழந்தைகளுக்கு ஒன்பது அல்லது பத்து வயது நடக்கும்போது, விநோதக் கதைகளிலும், தேவதைகளின் கதைகளிலும், கட்டுக் கதைகளிலும், தேசத்திற்காக உயிரைத் தியாகம் செய்த பெரியோர்களின் கதைகளிலும், தங்கள் ஆவலைக் காண்பிக்கின்றனர். வாலிபப் பருவத்தில் தோன்றும் "மனேரத சிருஷ்டிக் கொள்கையை" க்கொண்ட கற்பனுசக்தி இரண்டாம் வகைக் கற்பனுசக்தி. இதை மேல் நோக்கம் பொருந்திய கற்பனுசக்தியென்றும் சொல்லலாம். சரித்திரக் கதைகளிலுள்ள பெரிய மகான்களின் அரிய செயல்களில் பெரிதும் பிரியத்தைக் காண்பித்து அவர்களைப் பின்பற்றி வாழவேண்டுமென்று வாலிபர்கள் கருதுகின்றனர். இந்தப் பருவத்தில் வீரர்களின் வரலாற்றையும் யாத்திரிகர்களினுடைய வரலாற்றைப்பற்றியும் தேசசஞ்சாரம், தேசசஞ்சாரிகளைப்பற்றியும், மாணவர்களுக்குக் கற்றுக் கொடுக்க வேண்டும். மனிதப் பருவத்தில் காணப்படும் இலக்குவாய்ந்த கற்பனுசக்தி (Realistic imagination) மூன்றும் வகைக் கற்பனுசக்தியாகும். மனிதப் பருவத்தை யடைந்தவுடன் மனேவெழுச்சியால் செய்யக் கூடிய அநேக விஷயங்களை, நாம் தவிர்க்கின்றேம். விஷயங்களின் உண்மை நிலவரங்களையே இப்பருவத்தில் மனிதன் ஊன்றிப் பார்க்கிறான். விஷயங்களைக் காரணுதி காரணத்தால் ஆழ்ந்து சிந்திக்கின்றுன். நூதன ஆராய்ச்சியாளர்களுக்கும், சீர்திருத்தங்களை விரும்புவர்களுக்கும் "இலக்குவாய்ந்த கற்பனுசக்தி" அவசியம்.

கற்பனுசக்தியின் வகைகளைப்பற்றிப் பார்த்த பிறகு கற்பனுசக்தியை எப்படி விருத்திசெய்யலாம் என்று சற்றுகவனிப்போம். நம்மனதின்கண் ஏற்படும் ரூபிகரங்களுக் கேற்றவாறுதான் நம் கற்பனுசக்தியும் இருக்கும். மனதின்கண் நல்ல ரூபிகரங்கள் ஏற்பட உற்று நோக்கும் சக்தி அதிகம் விருத்தியடைந்திருக்கவேண்டும். மாணவர்கள் உற்றுநோக்கும் விஷயங்களைச் சீர்தூக்கிப் பார்க்கும்படியாய்த் தூண்டுதல் வேண்டும். சிலர் பார்வையினுல் கற்றுக்கொள்ளுகின்றனர். சிலர் கேட்டு விஷயங்களைக் கற்றுக் கொள்கின்றனர். இன்னும் சிலர் "செய்து" விஷயங்களைக் கற்

றுக் கொள்கின்றனர். ஆகவே மாணவர்களிடம் எல்லாப் புலன்களையும் உற்சாகப் படுத்தும் வகையில் போதிக்கும் ஆசிரியரே சிறந்த ஆசிரியராவார். வள, வள, சள, சளவென்று பேசிக் கொண்டுபோகாமல் அடிக்கடி, சொல்லிக்கொடுத்த விஷயங்களின் குறிப்புகளைக் கரும்பலகையில் எழுதி மாணவர்களின் கட்புலனைப் பயிற்சிக்கவேண்டும். புலப்பயிற்சிக்கான வஸ்துக்களை ஆரம்பப் பருவத்தில் அதிகம் உபயோகிப்பதால் சிறு மாணவர்களின் கற்பனுசக்தியதிகரிக்கும். "இன்றுதினத்தில் நமது மனதின்கண் தோன்றும் ரூபகங்கள் நேற்று நாம், நம்புலன்களினுல் பெற்ற அனுபவங்களினுல்தான்" என்ற உண்மையை ஆசிரியராகிய நாம் மறந்துவிடக்கூடாது. சில தொழில்கள், மாணவர்களின் கற்பனு சக்தியைப் பெரிதும் பயிற்சிக்கும். கதைகளை சித்திர உதாரணங்களால் நிரூபிக்கவேண்டும். கைவேலைகளும், சித்திரம் வரைதலும், கற்பனுசக்தியைப் பயிற்சிக்க முக்கிய சாதனங்கள்.

கடைசியாய் நாம் ஒரு விஷயத்தைப்பற்றி மாணவர்கட்குப் புகட்டும்போது, அந்த விஷயத்தின் **தன்மையை** நன்ருய் விளக்கிக் காட்டுதல் வேண்டும். ஒரு பொருளின் தன்மையையொட்டியே, அப்பொருளின் ரூபிகரம் நம்மனதில் ஏற்படக்கூடும். "**நையகரா** நீர்வீழ்ச்சியைப்பற்றிப் பேசும்போது நம்மாணவர்கள் அதன் பெரும் சப்தத்தை ரூபிகரம் செய்யும்படியான முறையிலும், சமுத்திரத்தைப்பற்றிப் பேசும்போது அதின் அலைகளின் முழக்கத்தை ரூபிகரம் செய்யும் முறையிலும், பளிங்குக்கல்லால் செய்த பதுமைகளைப்பற்றிப் பேசும்போது அக்கல்லின் வழுவழுப்பை ரூபிகரம் செய்யும்படியான முறையிலும்," ஆசிரியர் போதனை செய்யவேண்டும்.

சரியான பதில்

வழக்கைத்தலையன் :—டேய்! ஜெர்மன்காரன் நம்ப ஊருலே எல்லாம் குண்டு போடப்போருனுமே?

குடுமிக்காரன் :—நீ எம்ப்பா பயப்படுரே, குண்டு உன் தலையில் விழுந்தாலும் வழிக்கிகிட்டு போயிடுமே.

அறநெறித்தொடர்

(M. A. S. Udayar)

கடவுள் வணக்கம்

1. குருசினையேந்திக் குவலயமீட்ட
ஒருவனை யிறைஞ்சி யுள்ளன்போ
டறநெறித் தொடர்சில அறைகுது மெடுத்தே.

2. புறவுருவடிவாய்ப் பூங்கொடியமர்ந்த
திறமுறி ஸ்பிரீத்சாந்தெந்தை
திருவடி வணங்குதூஉம் செயல்புறந்தரற்கே

நூல்

அன்பினெறிநில்
ஆருளோம்பு
இயல்பிற்றிறியேல்
ஈனமகற்று
உண்மையுரை
ஊரலர் தூற்றேல்
எள்ளலொழி
ஏழ்பவம் போக்கு
ஐந்தீவினையகல்
ஒப்பவுரை
ஓரம்பேசேல்
ஔவை சொற்கேள்
அஃகலொழி
கடுத்துக் கூறேல்
ஙகரமொத்துவாழ்
சதிசெயப் பழகேல்
ஞமலிபோனேசி
கடமையைத் தவிரேல்
கணங் கொண்டாடேல்
தனஞ்செய் துதவு
நன்மைபல செய்
பகுத்துணவிரும்பு
மலைபோலுதவு
யானைபோலாதிரு
அரவின் செயலொழி
நலமில் தொழில் ஒழி
வன்மமகற்று
பழம்போனில்
உளம்போலோடேல்
மறச்செயலகற்று
கனவினும் பொய்யேல்
கனகம்பு தையேல்
காவலர்க்குதவு
கிருஷிகம் போற்று
கீழோர்ச் சேரேல்
குரவர் பணிசெய்
கூடாவினை செயேல்
கெஞ்சிக் கடன்கொளேல்
கேட்டன மறவேல்
கைதவம் செய்யேல்
கொலைத்தொழிலகற்று
கோவினைப் பகையேல்
கௌவை பேசேல்

1. குருசு = திருச்சிலுவை. இறைஞ்சுதல் = வணங்கித் துதித்தல்.

2. செயல்=எடுத்துக்கொண்ட நற்றொழில்.

3. இயல்பிற்றிறியேல்=இயல்பான நற்குணத்தினின்று மாறுபடாதே.

6. அலர்=பழி.

7. எள்ளல்=(பிறரை) இகழ்தல்.

8. ஏழ்பவம்=ஆங்காரம், கோபம், மோகம், உலோபம், பேருண்டி, பொறாமை, சோம்பல்.

9. ஐந்திவினை=களவு, பொய், காமம், கொலை, கள்.

11. ஓரம்=வஞ்சகமாய் ஒருபுறம் சார்தல்.

13. அஃதல்=குறைதல்.

16. சதி=கேடு.

17. ஞமலி=நாய்.

19. கணங்கொண்டு=தீயவர் கூட்டத்தில் சேர்ந்துகொண்டு.

20. தனஞ்செய்தல்=பொருளைச் சம்பாதித்தல்.

22 பகுத்துணல்=தம்மிடமுள்ளதைப் பகிர்ந்துண்டல்.

23. மலைபோல்=மலைதன்னிடத்துளவாம் அருவி முதலியவற்றால் பிறர்க்குதவுதல்போல்.

24. யானைபோல்=யானை அறிந்தறிந்தும் பாகனைக் கொல்லுதல்போல்; அதாவது: தனக்குச் செய்த நன்மையை மறந்து தீமையைமாத்திரம் நினைத்தல்.

27. வன்மம்=(பிறரிடம் கொள்ளும்) உட்பகை.

30. மறம்=பாவம்.

32. கனகம்=பொன்.

33. காவலர்=அரசர்.

34. கிருஷிகம்=வேளாண்மைத் தொழில்.

36. குரவர்=குரு முதலிய பெரியோர்.

40. கைதவம்=வஞ்சனை.

43. கௌவை=பொறாமை.

———

கிருஷிகனும் கிராம ஆசிரியரும்

N. R. திருவேங்கடம், S. 1.

(ஓர் ருசிகர சம்பாஷணை)

கிருஷிகன் :—இந்த ஏளெ தோட்டக்காட்டுப் புள்ளெங் களுக்கு படுப்பு என்னாத்துங்கோ வாத்தியாரய்யா? இவங்கல் லாம் மேப்படுப்புக்கா போப்போராங்க? இப்பிடி வெட்டியா நேரத்தைப் போக்கறத்தக் காட்டியும் எதோ அவுங்க தாய் தொவப்பனோடெ சித்தெ கூடமாட வேலெசெஞ்சா அவங்களுக் காவது ஒரு ஒதவியா இருக்குமுங்க!

ஆசிரியர் :—ஐயா! அவர்கள் மேல்படிப்புக்கு போகாமலே இருப்பது உண்மைதான் என்றாலும், பெரும்பாலும் அவர்கள் தங்கள் தங்கள் குலத்தொழிலேயே செய்வதாகவே வைத்துக் கொண்டாலும் அந்த தொழிலில் அவர்களுக்கு படித்துக்கொடுத் தல் அந்த தொழிலையாவது இன்னும் கொஞ்சம் மேலாக செய்ய அக்கல்வி உபயோகப்படும் அல்லவா?

கிரு. :—நீங்க என்ன சொல்றீங்கோன்னே புரியிலே வாத்தியாரய்யா? அதா படுப்பு?

ஆசி. :—எழுதுவதும் புஸ்தகத்தைப் படிப்பதுமட்டும் படிப்பல்ல. இம்மாதிரி எண்ணமெல்லாம் இப்பொழுது மலயேறி விட்டது. தற்கால படிப்பானது பையனுடைய சகல சங்கதி களையும் திறமையையும் வெளிப்படுத்தக்கூடிய தொழில்முறையில் மாறி இருக்கிறது. மேலும் அத்தொழிலானது பையனுடைய வாழ்க்கைக்கு அவசியமானதாகவும் இருக்கவேண்டும். ஆகவே பையனை வாழ்க்கையை சரிவர நடத்த தயார்செய்வதில் படிப்பு பயன்படவேண்டும். இதனால் பிள்ளைகள் படிப்பது எழுதுவதை யும் கற்பதோடு தங்களுக்குப் பிடித்தமான தொழிலையும் தெரிந்து கொள்கிறார்கள்.

கிருஷி. :—அப்படிங்களா! இவுங்கெல்லாம் எங்கலாட்டமா உழுவுற புள்ளெங்க. இவுங்குளுக்கு நீங்க என்ன படுப்பு சொல்லிக்கொடுக்குறதுங்க!

ஆசி. :—அதுவா! தோட்டவேலைமூலம் சொல்லிக்கொடுப் போம். பள்ளிக்கூடத்தில் ஒரு தோட்டம் இருக்கிறது. அதில்

பையன்களுக்கு தலைக்கொரு பாத்தி கொடுப்போம். அந்த பாத்திகளை அவரவர் மண்வெட்டியால் நன்றாகக் கொத்துவார்கள். பிறகு விதையை விதைத்து அவரவர் பாத்திக்கு அவரவர் தண்ணீர் ஊற்றிவருவார்கள். தண்ணீர் வாய்க்கால் வழியாகப் பாயும். பயிர் வளர வளர அது நன்றாக வளரவும், அதிக பலனைக் கொடுக்கவும் எரு அவசியம் என அவர்களே அறிகிறார்கள். பிறகு மாகூலை அடிக்கடி மாற்றிப்போட்டால் நன்றாக விளையும் என்றும் தெரிந்துகொள்ளுகிறார்கள். காய், கறி, பழங்கள் முதலியவைகளைச் சேகரித்து அவைகளைச் சந்தையில் கொண்டு போய் விற்றுவருவார்கள். இதனால் சந்தையில் வரவு, செலவு செய்யக்கூடிய பழக்கம் ஏற்படுகிறது. அவர்களுடைய வரவு செலவை எழுதி என்னிடத்தில் காட்டுவார்கள். இந்தப் பழக்கங்களெல்லாம் பிற்காலத்தில் விவசாயம் செய்ய உபயோகமாகாதா?

கிரு. :—சரிங்க! பசங்க என்னத்துக்கு சாமானெ சந்தைக்கு எடுத்துகிட்டு போவணும்? ஆராவது கூலிஆளுகிட்டெ குடுத்தனுப்புறது என்னாங்க?

ஆசி. :—நம்மால் செய்யக்கூடியதை நாமே செய்யவேண்டும். எடுத்ததற்கெல்லாம் பிறரை எதிர்பார்ப்பது மிகவும் கேவலம். 'தன் கையே தனக்கு உதவி' என்பது உனக்குத் தெரியாதா? இதை பையன்களும் அறிந்து சுயமாக உழைப்பதன் பிரயாசையையும், அதனுடைய சிலாக்கியத்தையும் அறிவார்கள். இவர்கள் எல்லாம் ஏழையானதால் பிற்காலத்தில் விவசாயந்தான் செய்வார்கள் என்று சொன்னீரல்லவா? ஆகவே பள்ளிக்கூடத்திலேயே அந்த விவசாயத்தில் கொஞ்சம் பழக்கத்தை ஏற்படுத்தி உழைப்பதற்குப் பழக்கிவிட்டால் நல்லதல்லவா? இதோ தெரிகிறதே! பூஞ்செடி! இதனால் ஒரு பலனும் இல்லையென்று நீ சொல்லுவாய். ஆனால் பிள்ளைகளுக்கு தெய்வபக்தியை அது ஏற்படுத்துகிறது. இது உனக்குத் தெரியுமா?

கிரு. :—என்னாங்க அரிசியமாயிருக்குது? பூஞ்செடி எப்பிடிங்க கடவுளு பத்தியை குடுக்கும்?

ஆசி. :—கடவுள் உணர்ச்சி எல்லாரிடத்திலும் இருக்கிறது. இயற்கைப்பொருள்களினால் இந்த உணர்ச்சி நமக்கு அதிகமாகும். இயற்கையில் உள்ள பூஞ்செடிகள், சோலைகள் இவைகளைப் பார்க்கும்போது பையனுடைய மனமானது விரிவாகி ஆனந்தப் படுகிறான். இம்மாதிரி ஆனந்தமே பக்தியாகும். இது அதிகப்

பட அதிகப்பட மகான்களுடைய நிலே என்று சொல்கிரேம். பிள்ளேகள் இம்மாதிரி கடவுள் பக்தியில் ஈடுபட அவரது சிருஷ்டிப்பொருளான பூஞ்செடிகள் உபயோகமாகிறது. பிள்ளேகள் இத்தோட்டம் போடுவதால், தோட்டம் போடக்கூடிய விதம், தண்ணீர் பாய்ச்சல், களேபறித்தல், நிலத்தை அளத்தல் முதலிய விஷயங்களே அறிகிருர்கள். மேலும் உழைப்பின் சிரமத்தையும் அதனுல் ஏற்படும் தேகசுகத்தையும் அறிகிருர்கள். இதனுல் விவசாயிகளுக்குமட்டுமல்லாமல் இதரப் பிள்ளேகளுக்கும் நன்மையே. எப்படியென்றுல் பிள்ளேகள் இதில் பழக்கப்பட்டுவிடுவதால் தங்கள் தங்கள் வீட்டுக் கொல்லேயில் தங்களுக்கு வேண்டிய காய்கறிகளேப் பயிர்செய்துகொள்ளலாம். இது தெரியாவிட்டால் காய்கள் விலேக்குத்தானே வாங்கவேண்டும்? தேகத்திற்கும் ஆரோக்கியம், காசு செலவும் குறைவு, நமக்கு இஷ்டப்பட்ட காய்கறி புதியதாகக் கிடைக்கிறதல்லவா? ஆகவே வெறும் பேனு பிடித்தல்மட்டும் படிப்பல்ல என்பதை மறந்துவிடாதே. நீ உன் தகப்பனுர்காலத்திலிருந்து இன்றுவரை விவசாயம் பார்க்கிருய். அனுபோகமும் அடைந்திருக்கிருய். ஆனுல் உனக்கு எழுதப் படிக்கத் தெரியுமா? உனக்கு கடிதம் எழுதவோ, படிக்கவோ, வரவு செலவை எழுதவோ முடியாது. யார் உதவியையாவது தேடவேண்டும். உலக சமாச்சாரங்களும் தெரிந்துகொள்ள வழியில்லே. உங்கள் பிள்ளேக்கோ எழுதப் படிக்கத் தெரியும். தோட்ட வேலேயும் தெரியும். எது நல்லது? தோட்ட வேலே மட்டுமா? அல்லது படிப்பும் கூடத் தெரிவது நல்லதா?

கிரு. :—வாத்தியாரய்யா! ஒங்குளுக்கு ஒரு கும்புடுங்க! எனக்கு படிக்கதெரியாத்தனுத்தானே இதெல்லாம் ஒன்றுமே தெரியுலே. எங்க ஊரு பள்ளிக்கொடத்திலெ இப்பிடி ஒண்ணுங் காணுமேன்னுதான் கேட்டனுங்க கோவுச்சுகிடாதிங்க! இன்னம் என்னெக்காச்சி நேரம் கெடச்சப்பொ இப்படியே வர்ரனுங்க. சரி நான் வருட்டுங்களா?

ஆசி. :—சரி, நல்லது, உனக்கு இனி சாவகாசம் கிடைக்கும்போதெல்லாம் இங்கே வந்தால் இன்னும் அநேக விஷயங்களே உனக்கு எடுத்துச் சொல்லுவேன்.

பாடக் குறிப்பு

(R. Pitchai Pillai.)

வகுப்பு : IV. பாடம் : பூகோளம்.

நேரம் : 35 நிமிஷம். நோக்கம் : வாயுவும், காற்று வீசுதலும்.

உபகரணம் : நான்கு பக்கமும் அடைப்புள்ள ஒரு அட்டைப்பெட்டியின் மேல்பக்கத்தில் இரண்டு சிறு புகைபோக்கிகளமைத்தல். 2 மெழுகுவத்திகள், தீப்பெட்டி, கொஞ்சம் ஆமணக்கெண்ணெய், நூல்திரியொன்று, ஒரு விசிறி.

பீடிகை : நாம் உயிருடனிருப்பதற்குத் தேவையான உணவு, தண்ணீர், வாயுவைப்பற்றியும், படுக்கையறை, வகுப்பறைகளிலுள்ள ஜன்னல்களையும், கதவுகளையும் திறந்துவைப்பதின் காரணங்களைப்பற்றியும் மாணவருடன் சம்பாஷித்து வாயு, காற்று என்பவைகளின் கருத்தை வரவழைத்து, வாயுவையும், காற்று வீசுதலையும்பற்றி படிப்போமென நோக்கத்தைக் கூறி பாடத்தை ஆரம்பிக்கவும்.

விஷயம்	முறை
வாயு :—வாயுவை நாம் கண்ணால் பார்க்கமுடியாது. நம்மைச் சுற்றி எங்கும் வாயு சூழ்ந்திருக்கின்றது. வாயு வீசினால் நம்மேல் படும்போது அதை உணருகிறோம்.	விசிறியை மாணவர் உபயோகித்து வாயுவை உணரும்படி தூண்டி விஷயத்தை விஸ்தரிக்க.
காற்று :—வீசி அடிக்கும் வாயுவைத்தான் காற்று என்கிறோம்.	காற்றில்லாதபோது காற்றைப் பெறுவதற்காகப் பலவித விசிறிகளை உபயோகிப்பதை ஞாபகப்படுத்தவும்.
காற்று வீசுதல் :—சூரிய வெப்பத்தால் நம்மைச் சுற்றியுள்ள வாயு உஷ்ணமடைகிறது. உஷ்ணமடைவதால் இலேசாகிறது. இலேசாகுவதால் மேலே செல்லுகிறது. இவ்வாறு ஓரிடத்திலுள்ள வாயு மேலே செல்லும்போது, அந்த இடத்தைப் பக்	4 பக்கங்களிலும் மூடப்பட்டு, மேல்பக்கம் 2 புகைபோக்கிகளுள்ள அட்டைப்பெட்டியினுள் ஒவ்வொரு புகைபோக்கிக்குங்கீழ் ஒரு மெழுகுவர்த்தியாக 2 மெழுகுவர்த்திகளையும் பெட்டியின் உள்ளே வை. ஒரு மெழுகு

விஷயம்	முறை
கத்திலுள்ள வாயு ஓடிவந்து அடைக்கின்றது. இவ்வாறு வாயுவானது ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்தை நோக்கி அசையும்போது காற்று வீசுகின்றதென்கிறோம்.	வர்த்தியைமட்டும் எரியவிடு. நூல் திரியை அமணக்கு எண்ணெயில் தோய்த்துக் கொளுத்து. பின்னர் அதை அணைத்துவிட்டு எரியாத மெழுகுவர்த்திக்கு மேலுள்ள புகைபோக்கியின் வாய்ப்புறம் தூக்கிப்பிடி. திரியினின்று புறப்படும் புகை கீழ்ப்புறமாக புகைபோக்கியினுள் போவதை மாணவருக்குக் காண்பிக்கவும். பின்னர் அதே திரியை எரியும் மெழுகுவர்த்திக்கு மேல் உள்ள புகைபோக்கியின் வாய்ப்புறம் தூக்கிப்பிடி. இப்போது புகை, பெட்டியினுள் போகாமல் வெளியே பல பக்கங்களிலும் பரவிப் போவதைக் காண்பித்து விஷயத்தை விளக்கவும்.

பரீக்ஷை

1. நம்மைச் சுற்றிலும் வாயு உண்டென்று நாம் எவ்வாறு கண்டுகொள்ளுகிறோம்.

2. வாயுவுக்கும் காற்றுக்கும் உள்ள வித்தியாசத்தைக் கூறு.

3. காற்று வீசுவதற்குக் காரணமென்ன ?

க. ப. சு.

வாயு :—நம்மைச்சுற்றி எங்கும் உள்ளது. கண்ணால் காண முடியாது. வீசும்போது உணர்ச்சியைக்கொண்டு அறிகிறோம்.

காற்று :—வீசியடிக்கும் வாயு காற்று எனப்படும்.

காற்று வீசுதல் :—ஓரிடத்தின் ஆகாயம் சூரியவெப்பத்தால் உஷ்ணமாகி, இலேசாகி மேலே செல்ல, இவ்வாறு காலியான இடத்தை நோக்கிப் பக்கத்திலுள்ள வாயு ஓடிவருகிறது. வாயு ஓரிடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு அசையும்போது காற்று வீசுவதாகும்.

தமிழ்நாடு ஆவணக் காப்பக நிலையம்
182457

யோசனைக்கணக்கு

(S. Moses Naidu, Vijayapuram.)

ஒரு நதி, அதில் ஒரு பாலம், இருபக்கத்திலும் சிலர் நிற்கின்றனர். ஒரு பக்கத்தில் உள்ளவர்—எதிரிலுள்ளவர்களை நோக்கி, "நீ" இப்பக்கம் வா, நாம் இரண்டுபங்காகவும், அப்பக்கம் ஒரு பங்காகவும், இருக்கலாம் என்றார்கள். அதற்கு மற்ற பக்கத்தார் "நீ" இங்கு வா இருவரும் சமமாக இருக்கலாம் என்றார்கள். அப்படி ஒருவர் வர சமமானது என்றால், ஒவ்வொரு பக்கமும் முன் இருந்த ஜனங்கள் எத்தனைபேர்?

யோசனைக்கணக்கு விடைகள்

(கொத்து 31, மலர் 10, 11, பக்கம் 296.)

விடை.—119 முட்டைகள்.

ஷை விடையளித்தவர்கள்:—

(1) S. M. Jebamalai Thevar, H. M. Kallar Boys' School, Thengilipatti.

(2) C. George Sydney (Sec. Grade, R. C. Trng. School).

(3) Kathi Chinnakkaruppan, Kothamangalam, Ramnad District.

(4) R. Pushpavalli, V Class pupil, C/o S. Moses Naidu, Manager, Mixed School, Vijayapuram.

குனிந்தால் விடை

(ஒரு கணக்கு உபாத்தியாயர் வழியுடன் கரும்பலகையில் ஒரு கணக்கைப் போட்டுக் காண்பித்தபின் அதை மறைத்து நின்றுகொண்டு)

உபாத்தியாயர்:—டேய் முத்து! இக்கணக்குக்கு விடை காண சுருக்கமான வழி எது?

மூலையிலிருந்து:—ஸார்! நீங்கள் குனிந்தவுடன் விடை தெரியும் ஸார்.

ஒன்றுமில்லை

S. D. M. Gnanadurai, (Old Student)

ஒன்றுமில்லை என்ற விஷயத்தைப்பற்றி என்ன எழுதுவது என்று சிலர் ஆச்சரியப்படலாம். ஆனால் கொஞ்சம் பொறுங்கள். 'ஒன்றுமில்லை' என்பதின் மகிமையைக் கேட்டபின் இதில் இவ்வளவு இருக்கிறதா என்று உங்களுக்கே ஆச்சரியமாய் இருக்கும்.

காலையில் என் நண்பன் ரமணி தினசரி பத்திரிகையை வைத்துக்கொண்டு ஒரு மணி நேரம் செலவு செய்து ஒரு வரிகூடத் தவறாமல் வாசித்தான். 'என்னடா பேப்பரில்' என்று கேட்டால் 'ஒன்றுமில்லையடா' என்று கூறுகிறான். ஒருமணி நேரம் செலவுசெய்து படித்ததில் ஒன்றுமில்லைபோலும்!

பாடசாலை மாணவர்கள் ஓயாமல் சளசளவென்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். உபாத்தியாயர் சொல்லிக்கொடுப்பது மாணவர் காதில் விழுவதில்லை. 'என்னடா? பேசிக்கொண்டு இருக்கின்றீர்கள். அவ்வளவு சத்தத்திற்கும், சிரிப்புக்கும் என்னடா காரணம்' என்று கேட்டால் 'ஒன்றுமில்லை சார்' என்று மறுமொழி கிடைக்கின்றது.

ஒரு பெரிய உத்தியோகஸ்தரை தினம் பலர் பேட்டி காண வருகின்றார்கள். அவர் வந்தவர்களை 'இப்படி வந்ததற்குக் காரணம் என்ன' வென்று கேட்டால் 'ஒன்றுமில்லை' என்று மேகத்தினிடை தோன்றும் மின்னலைப்போல் தங்கள் பற்களைக் காண்பித்து புராணத்தை ஆரம்பித்துவிடுகிறார்கள்.

சற்று வாட்டமுற்று இருக்கும் எனது நண்பன் சகாராமை 'என்னடா, உடம்பு ஒரு மாதிரி இருக்காப்பலே இருக்கு' என்று கேட்டால் 'ஒன்றுமில்லை, நேற்று சற்று ஜுரமாய் இருந்தது' என்கிறான்.

வீட்டில் ஏதோ விசேஷம் என்று சற்று லீவு வாங்கிக்கொண்டு மறுநாள் ஆபீஸுக்குப்போய் 'நேற்று விசேஷம்

ஏதாவது உண்டா' என்றால் 'ஒன்றுமில்லை, தங்களைப்பற்றி ஒரு புகார்தான் நடந்தது' என்கின்றார்கள்.

ஒரு ஊரில் பிரபல உபந்யாஸர் இரண்டு மணி நேரம் பொருளாதார நெருக்கடியைப்பற்றியோ, அல்லது தற்போது உள்ள வேலையில்லாத் திண்டாட்டத்தைப்பற்றியோ, சண்டையைப்பற்றியோ, அல்லது இந்தி எதிர்ப்பைப்பற்றியோ பிரமாதமாக சொற்பொழிவு நிகழ்த்துகின்றார். அதை வெகு ஜாக்கிரதையாகக் கவனித்து வந்த இரு நண்பர்கள் பின்வருமாறு பேசிக்கொள்கிறார்கள்.

முதல் வாலிபன் :—டேப்: இத்தனை நேரம் அளந்தாரே விஷயம் ஒன்றுமில்லையேடா.

இரண்டாம் வாலிபன் :—ஆமாம்டா! புது சமாசாரம் ஒன்றுமில்லாவிட்டாலும், இத்தனை நேரம் வாசாமகோசரமாய் ஒரு போடு போட்டார் பார்த்தாயா, அதுதான் எனக்கு ஆச்சரியம்.

கோர்ட்டில் இரண்டு வக்கீல்கள் பறிமாறிக்கொள்கிறதாவது.

முதல்வர் :—உங்கள் கேஸ் ரொம்ப கடினமானதோ?

இரண்டாம் வக்கீல் :—ஒன்றுமில்லை சார். அதில் இரண்டே க்ளு (clue) இருக்கிறது. அதைத் தெரிந்துகொண்டால் பிறகு ஒன்றுமில்லை என்கிறார். கேஸில் இரண்டு நுட்பமான மர்மங்கள் இருந்தால் அதில் எப்படி ஒன்றுமில்லாமல் இருக்க முடியும்?

வைத்தியர்களைப்பற்றிக் கேட்கவேண்டியதில்லை. வீட்டில் பையனுக்குக் கடுங்காய்ச்சல் கண்டு இருந்தால் வீட்டுக்காரர் பெரிய வைத்தியரை அழைப்பித்துக் காண்பிக்கின்றார். பையனுடைய தேக ஸ்திதியை ஒரு நாழிகை நேரம் பார்த்துவிட்டு அவரைப் பல கேள்விகள் கேட்டு கடைசியில் 'ஒன்றுமில்லை சார்' பையனுக்கு டைபாய்டுதான் என்று சொல்கிறார். பையனுக்கு சீக்கிரம் குணமாகிவிடுமா என்று கவலையுற்ற முகத்துடன் கேட்க, 'ஒன்றுமில்லை' நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம். இரண்டு டோஸ் கொடுத்தால் சரியாய்விடும் என்று சொல்லி

பையில் பணத்துடன் செல்கிறூர். ஜாரம் மும்மரமாய் அடித்துக்கொண்டிருக்கும்பொழுது 'ஒன்றுமில்லை' என்று சொல்வானேன்.

ஒரு மங்கை புன்முறுவலுடன் தன் பர்த்தாவிடம் வந்து நிற்கிறுள். அவர் நிமிர்ந்து பார்த்து என்னவேணும்? என்று கேட்டால், 'ஒன்றுமில்லை' அடுத்தாத்து அம்புஜம் ஐம்பது ரூபாய்க்கு அழகான புடவை ஒன்று வாங்கி வந்திருக்கிறுள். எனக்கு அதுமாதிரி ஒன்று வேணும். வேறு ஒன்றுமில்லை என்று தன் கதையை ஆரம்பித்துவிடுகிறுள். விலையுயர்ந்த புடவை வாங்குவது ஒன்றுமில்லாத காரியமா?

நான் இக்கட்டுரையை முடிக்கும் சமயத்தில் எனது நண்பன் கல்யாணம் 'என்னடா ரொம்ப மும்முரமாய் எழுதிக்கொண்டிருக்கிறுய்' என்று கேட்டான். நான் 'ஒன்றுமில்லையடா' என்று சொல்லி என்னுடைய வேலையை ஆரம்பித்தேன். உடனே அவன் இக்கட்டுரையை வாசித்துவிட்டு, 'என்னடா இது. ஜகத் முழுவதும் ஒன்றுமில்லை என்று ஒரே அடியாய் அடித்துவிட்டாய்' என்றுன். நான் 'அது நிஜம்தானே. கடவுளுக்குக் கூட நாமம், ரூபம், குணம், சுக துக்காநுபவங்கள் முதலியன ஒன்றுமே இல்லையேடா' என்றேன்.

முடிவில் வாசகர்களுக்கு ஒரு வார்த்தை. இதில் 'ஒன்றுமேயில்லையே' என்று பலர் ஆக்ஷேபிக்கக்கூடும். அதற்கு நான் ஜவாப்தாரியல்ல. தயைகூர்ந்து தலைநிமிர்ந்து தலைபங்கத்தைப் பாருங்கள். அதிலேயே நான் ஒன்றுமில்லை என்று எச்சரித்துவிட்டேன். ஜாக்கிரதை!

வைத்தியமும் ஆரோக்கிய விசாரணையும்

(S. Viyagula Sesudian.)

இந்நாளில் நமது தேசம் பலவகையான நோய்களுக்கு இருப்பிடமாகிவிட்டது. அந்த நோய்களினால் வருஷந்தோறும் இலக்ஷக்கணக்கான ஜனங்கள் நமது தேசத்தில் மடிகிறார்கள். இவ்விதமாக ஜனங்கள் இறந்துபோகாதபடி கவர்மெண்டார் ஒவ்வொரு ஜில்லாவிலும் வைத்தியசாலைகளை ஸ்தாபித்திருக்கிறார்கள். அவைகளில் வைத்தியம் இனமாகச் செய்யப்பட்டு வருகின்றது. இவ்வித வைத்தியசாலைகள் பலவகைப்படும். (1) தர்ம வைத்தியசாலை.—அங்கு வியாதிகள் சொஸ்தமாகும்வரையில் நோயாளிகளை வைத்துப் பராமரிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. (2) டிஸ்பென்சரிகள்.—இவ்விடத்தில் பிரதிதினமும் குறிப்பிட்ட வேளையில் வியாதியஸ்தரைப் பார்வையிட்டு அவ்வியாதிகளுக்கேற்ற மருந்துகள் கொடுத்துவருகின்றனர்.

ஒவ்வொரு முக்கியமான வியாதிக்கும் தனித்தனி வைத்தியசாலைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கண்ணுக்குரிய நோய்களுக்கு கண் வைத்தியசாலையும், க்ஷய ரோகத்திற்காக க்ஷய ரோக வைத்தியசாலையும், குஷ்டரோகத்திற்காக குஷ்டரோக வைத்தியசாலையும், பைத்தியம் பிடித்தவர்களுக்காக பைத்தியக்காரர் வைத்தியசாலையும், பிரசவிக்கும் ஸ்திரீகளைப் பராமரிப்பதற்காக மருத்துவ வைத்தியசாலையும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இன்னும் காலரா, பிளேக், வைசூரி, முதலிய கொள்ளை நோய்கள் பரவாவண்ணம் வேண்டிய ஏற்பாடுகளும் செய்திருக்கிறார்கள். இத்தகைய கொள்ளைநோய்கள் பரவாவண்ணம் முதலிலேயே ஊசிபோட்டுக்கொள்ளும்படி வற்புறுத்துகிறார்கள். மக்கள் யாவரும் நோய்வாய்ப்பட்டு வீணிலே சாகாமல் இருக்க இத்தகைய வசதிகளை நம் காருண்ய கவர்மெண்டார் அளித்து வருகின்றனர்.

ஒவ்வொரு மாகாணத்திலும் வைத்திய விஷயங்களுக்கு மேலதிகாரியாக இருப்பவர் ஸர்ஜன்-ஜெனரல் (Surgeon general). அவருக்குக் கீழ் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஒரு பெரிய வைத்தியர் உண்டு. அவர் டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் அண்டு ஸானிடரி ஆபீஸர் (District Medical and Sanitary Officer). ஜில்லா முழுவதிலும் வைத்திய விஷயங்களுக்கும், ஆரோக்கிய விசாரணைக்கும்

அவரே பொறுப்பாளி. அவருக்கு உதவியாக பல வைத்தியர்களிருக்கிறார்கள். தாலூகா போர்டாராலும், முனிஸிபாலிடியாராலும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் வைத்தியசாலைகளில் அஸிஸ்டன்ட் ஸர்ஜன், ஸப்-அஸிஸ்டன்ட்-ஸர்ஜன் முதலானவர்களும், மருந்து கலந்துகொடுக்கக் காம்பவுண்டர்களும் வேலைபார்த்துவருகிறார்கள். இவர்கள் எல்லோரும் டிஸ்ட்ரிக்ட் மெடிக்கல் ஆபீஸருடைய அதிகாரத்திற்கு உட்பட்டவர்கள்.

சுகாதாரமான விஷயங்களைக் கவனித்துப் பிரஜைகளுடைய க்ஷேமத்திற்கு வேண்டியவற்றைச் செய்வதற்காக ஆரோக்கியானுகூல சபை (Sanitary Board) என்ற ஒரு சபை உண்டு. இந்தச் சபையில் ஸர்ஜன்-ஜெனரலும் ஒருவராவர்.

இவ்விதமாக நமது காருண்ய கவர்மெண்டார் பிரஜைகளின் க்ஷேமத்திற்காக பலவிதமான வைத்தியசாலைகளை ஏற்படுத்தி பொருட்செலவைக் கிஞ்சித்தும் கவனியாது நாமெல்லோரும் இன்புடன் வாழ ஏராளமான பணத்தைச் செலவு செய்கின்றனர்.

சத்திய போதினி

ஒரு உயர்தர மாதாந்தர தமிழ் சஞ்சிகை

மாதிரி பிரதி இனும்

நானாவித விஷயங்கள்: தற்கால அரசியல் நிலை, வேத விஷயங்கள், சிறு கதைத் திரட்டுகள், உலக நவீனங்கள், சுகாதாரப் பகுதி, மாதர் பகுதி முதலியன அடங்கிய ஒரு மாத சஞ்சிகை.

சந்தா விவரம்

உள் நாடு	... ரூ.	1—0—0
வெளி நாடு	... ரூ.	1—6—0

விலாசம்:

சூப்பெரின்டென்டெண்டு,
செயின்ட் ஜோசப்ஸ் இண்டஸ்ட்ரியல் ஸ்கூல் பிரஸ்,
திருச்சினுப்பள்ளி.

பாலர் பகுதி

S. Sundaram, S. 2.

காலம் கோர்டை விடுமுறை.] [இடம் வகுப்பறை.

பேஞ்சு :—அப்படா, இரண்டு மாதம் கோடை லீவு சுகமாக இளைப்பாறலாம். நம்மைப்பிடித்த குட்டிச்சாத்தான் எல்லாம் ஊர் போய் ஒழிந்தன.

டேஸ்க் :—ஆமாண்டா தம்பி, கவலையற்றுத் தூங்கலாம். பத்து மாதம் பட்ட வாதைக்கு இரண்டு மாதம் இளைப்பாறினாலும் கட்டாது.

பேஞ்சு :—போண்ணே, நீ என்னைவிட ரொம்பக் கஷ்டப் பட்டுவிட்டாயோ?

டேஸ்க் :—உனக்கு என்ன தெரிகிறது. உன்மீது அசையாமல் உட்கார்ந்துகொண்டு இருக்கிறார்கள். நான் பட்ட பாட்டைக்கேட்டால் நாடெல்லாம் சிரிக்கும்! அவர்கள் புஸ்தகங்களை கழுதைபோல சுமப்பது நான். அவர்களுக்குப் படிப்பதற்கும் எழுதுவதற்கும் உதவியாக இருப்பது நான். சேம்பேறிகளுக்கு சமயங்களில் தூங்கவும் காப்பி அடிக்கவும் உதவுவதும் யான். என்னன்றி செய்யினும் அவர்கள் என்னை பொருட்டாக மதிப்பதில்லை. "நன்றி மறப்பது நன்றன்று" என்ற ஆன்றோர் வாக்கையும் அவர்கள் மறந்தனர்போலும்.

பேஞ்சு :—ப்பூ... இதுதானா ஒரு பிரமாதம். நான் செய்யும் நன்மைகள் பல. நான் அவர்களை நாள் முழுவதும் சுமந்துகொண்டு இருக்கிறேன். என்மீது சுகமாகவும் ஒய்யாரமாகவும் சாய்ந்துகொண்டு இருக்கிறார்கள். அவர்கள் முதுகு கூனாமலும், நெஞ்சு குறுகாமலும், தோள்கள் வளைவுறாமலும் பாதுகாப்பது யான். என்னைவிட நீ பிரமாதமான உபகாரம் செய்துவிட்டாயோ?

டேஸ்க் :—அது கிடக்கட்டும் தம்பி, மேற்கு மலைச்சாரலில் தேக்கு மரச்சோலையாக, கண்ணைக்கவரும்வண்ணம் பொலிவுற்று, மயில்களும் குயில்களும் வண்ணக்கிளிகளும், அணில்களும் வந்துறைய இன்புற வாழ்ந்தோமே அதுவும் ஒருகாலம். இந்த பாடசாலைக்கு வந்தபோதுதான் என்ன வனப்புடன் இருந்தேன். செய்தவர் எனக்குப் பளபளவென் மின்னும்படி அழகுசெய்து, பாலீஷ் ஏற்றி இருந்தார். புக்ககம் வந்த புதிய நாட்டுப்பெண்ணைப்போல் இருந்தேன். இப்போது பார்க்க பரிகாசமாகவும், நோக்க ஏளனமாகவும் ஆகிவிட்டேன். இதை நினைக்க நினைக்க உள்ளம் புண்ணாகிறது.

பேஞ்சு :—நானும் அப்படித்தானே இருந்தேன். காலம் ஆக ஆக மூப்பு அதிகரிப்பதும், உடல் தளர்வதும் சகஜந்தானே. நாம் அவர்களின் சுகாதார வாழ்வுக்கு பங்கம் உண்டாகாமலும், போதனு அலுவலுக்கு ஹானி நேரிடாமலும் பாதுகாப்பதுடன், விசேஷமாய் கட்புலன் குன்றுமலும், வசதியின்மை தாழாண்மை முதலிய ஒழுக்கக் குறைகளையும், கவனக்குறைவு, களைப்பு முதலிய மனக்குறைகளையும் நிவர்த்தி செய்கிறோம். நாட்டை ஆள்பவர்களும், நகராதிகாரிகளும் ஒருகால் நம் உதவியை நாடியவர்களே. கைம்மாறு கருதாது உதவி செய்யவே நாம் பிறந்துவிட்டோம். வருந்திச்சுமக்கிறவர்கள் பாக்கியவான்கள்!

டேஸ்க் :—என் உடம்பைப்பார் உருக்குலைந்துவிட்டது. ஓரங்களில் எல்லாம் கத்திவெட்டு. ரம்பத்தைப்போல் பற்கள் வைத்துவிட்டார்கள். என் தலையில் பார் எத்தனை முகபிலாக்கள் (Initial) வருஷா வருஷம் வருபவர்கள் எல்லாம் அவர்கள் பெயரை எனக்கு வைத்துவிட்டுப் போகிறார்கள். எத்தனை பெயர்கள்தான் எனக்கிடுவது?

பேஞ்சு :—சரி. நான் சொல்வதை சற்று கேள். கணக்கு உபாத்தியாயருக்குக் கோபம் பிறந்துவிட்டால் என்பாடுதான் பெரிய ஆபத்து. உடனே இரண்டு கால்களை என்மேல் செங்குத்தாய் நிறுத்திவிடுகிறார். அப்போது நான் படும்பாடு உனக்கு என்ன தெரியப்போகிறது. என் முதுகு வளைந்து அர்ஜுனன் வில்போல் ஆகிவிடுகிறது. வில்லில் ஒரு பாணந்தான் ஏற்றுவார்கள். என்மீதோ இரண்டு மூன்றுகூட ஒரே சமயத்தில் ஏற்றிவிடுவார்!

டேஸ்க் :—பாடசாலையில் சங்கங்கள் கூடும்போது அவர்களுக்குச் சந்தோஷம் வந்துவிட்டால் 'டமார் டமார்' என்று என்னை அடித்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். பாட்டு வந்துவிட்டால் என்னை மிர்தங்கம் என்று நினைத்துக்கொள்ளுகிறார்கள். நான் இருந்த பளபளப்புக்கு என்னைக் கீறி அங்கவீனம் செய்ததுமல்லாமல் மையை ஊற்றி கரும்புள்ளி செம்புள்ளி குத்திச் சாக்கட்டியால் பட்டை நாமங்கள் தீட்டி என்னை அவலக்ஷணம் செய்கிறார்கள். யாராவது பேசிவிட்டால் மானிட்டர் 'படார்' 'படார்' என்று விலர்ப்புடைக்கக் குத்துகிறார். என்னுடைய நரம்புகள் தளர்வடைந்தன. எலும்புகள் நெக்குவிட்டன. இது கண்ட அவர்கள் என்னை தொட்டில் என்று நினைத்து தாலாட்ட ஆரம்பித்துவிட்டார்கள். ஒரு காலையும் முறித்து முடமாக்கினர். நமது ஜெனரல் ஆஸ்பத்திரியாகிய, Manual Training

Class-சுக்குக் கொண்டுபோகப்பட்டேன். அந்த மாஸ்டர் ஒரு தகட்டை வைத்து அடித்து சீர்படுத்தினல் சிறிது நாளில் பழைய கதிதான்.

மேஜை:—அப்பட்ா, இதுவெல்லாம் ஒரு பிரமாதமாகப் பேசிக்கொள்ளுகிறீர்களே. ஜாகிரபி உபாத்தியாருக்குக் கோபம் வந்துவிட்டால் கையை மடக்கி பலங்கொண்டமட்டும் குத்து வார். ஹிஸ்டரி மாஸ்டர் என்மீது ஏறிக்கொண்டுதான் பிரசங் கம் செய்வார். சயின்ஸ் வாத்தியார் என்மீது திராவகத்தை ஊற்றிவிடுகிருர். சாராயத்தை (Spirit) ஊற்றி தீ வைத்து விடு கிருர். இதுவெல்லாம் நான் சகித்துக்கொண்டுதானே.........

நாற்காலி:—நான்சென்ஸ். இதுவென்ன பெரும் இறைச்ச லாக இருக்கிறது. கொஞ்ச நாளைக்காவது இளைப்பாறலாமென் ருல் அதற்கும் பங்கம் செய்கிறீர்களே. உங்களுக்கு விடுமுறை கொடுத்ததே தவறு. மறுமுறை ஏதாவது சப்தம் உண்டானல் கேன் பண்ணிவிடுவேன் ஜாக்கிரதை.

"கப் சிப்"

சில பழமொழிகள்

1. அரைக்காசுக்குக் கல்யாணமாம், அதிலே கொஞ்சம் பாண வேடிக்கையாம்.
2. பணக்காரன் வீட்டுக் கோழிமுட்டை, ஏழை வீட்டு அம்மிக்கல்லை உடைக்கப்போகுமாம்.
3. உயரப்பறந்தாலும், ஊர்க்குருவி பருந்தாகுமா?
4. துணிந்தவனுக்குத் துக்கமில்லை, நனைந்தவனுக்கு ஈரமில்லை.
5. நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும், தோட்டிக்குப் புல் சுமக்கிற வேலை போகுமா?
6. மலையில் விளைந்தாலும், உரலில்தான் மசியவேண்டும்.
7. கொக்கு முட்டையும், குறவன் சுடுகாடும் காண்பதரிது.
8. ஓட்டை சட்டியானலும், கொழுக்கட்டை வெந்தால் சரி.
9. கழுதைக்குத் தெரியுமா கஸ்தூரி வாசனை?
10. அரசன் அன்று கொல்லும், தெய்வம் நின்று கொல்லும்.
11. மீன் குஞ்சுக்கு, நீச்சம் பழக்கவேண்டுமா?
12. நண்டு கொழுத்தால் வளையிலிராதாம்.

கடலூர் புதுப்பாளையம் அர்ச். சூசையப்பர் பழைய மாணவிகளின் சங்கத் திறப்புவிழா

கடலூர் புதுப்பாளையம் அர்ச். சூசையப்பர் போதனாமுறைப் பெண் பாடசாலைப் பழைய மாணவிகள் சங்கத் திறப்புவிழா சங். லெயோததிமரி தாயார் அவர்கள் தலைமையில் வெகு சிறப்பு விமரிசையுடன் 24-3-'41 திங்கட்கிழமை இனிது நடந்தேறியது. அவ்வமயம் மேற்படி பாடசாலைத் தலைமை உபாத்தியாயினி சங். பொஸ்திஞமரி சகோதரி, B.SC., L.T. அவர்கள் வரவேற்பு உபசார மளித்து சங்கத்தின் நோக்கத்தைப்பற்றி விரிவாக எடுத்தோதினார்கள். பின் மேற்படி பாடசாலை முதல் ஆசிரியை சங். அபிரகாமரி சகோதரி அவர்கள், ஆசிரியைகள் கடமை என்பதைப்பற்றி சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி பொழிவதன்ன சொன்மாரி பொழிந்தார்கள். இறுதியில் சங். தாயார் அவர்கள் ஆசிரியைகளுக்குக் கல்வியினும் ஒழுக்கமே சிறந்ததெனவற்புறுத்திப் பேசினார்கள். தலைமை உபாத்தியாயினியின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் இனிது முடிவு எய்தியது.

Arputhamary Susai, Asst.,
St. B. G. S. Nellikuppam.

பெற்றோர் சங்கம்

Sri Ranganatha Municipal Boys School,
Puthu Agraharam, Srirangam
S. Varadharaja Row

இன்று (2–5–41) பெற்றோர் சங்கத்தின் ஆதரவின்பேரில் இப்பாடசாலையில் "குழந்தைகள் விருந்து" நடைபெற்றது. அதுசமயம் ஸ்ரீரங்கம் நகர சபை நிர்வாக அதிகாரி (Municipal Commissioner) திருவாளர்: S. குப்புசாமி முதலியார் அவர்கள் தலைமை வகித்தார்.

திருச்சினுப்பள்ளி ரேஞ்சு ஜூனியர் டிப்டி இன்ஸ்பெக்டர் திருவாளர்: V. D. பிச்சைப்பிள்ளை அவர்கள் "பெற்றோர் சங்கமும் அதன் கடமையும்" என்பதைப்பற்றி ஓர் சொற்பொழிவு நிகழ்த்தினர்.

பின்னர், குழந்தைகள் கும்மி, கோலாட்டம், சங்கீதம் முதலியன நடத்திக் காட்டினர். பிறகு ஸ்ரீரங்கம் கவர்ன்மெண்ட் ஆஸ்பத்திரி Lady Doctor Srimathi Mrs. Peter அம்மையார் அவர்கள் குழந்தைகளுக்கு பரிசுகள் வழங்கினார்கள்.

மேலும் அது சமயம் திருச்சி ஜில்லா Senior Deputy Inspector திருவாளர்: E. V. கோபாலய்யர் அவர்களும், திருச்சி தாலூகா கல்வி சபை அங்கத்தினர் திருவாளர்: S. T. ராமானுஜய்யங்கார் அவர்களும் இன்னும் பல பெற்றோர்கள், ஆசிரியர்களும் இதில் கலந்துகொண்டது போற்றத்தக்கது.

கடைசியாகத் தலைவர், உபன்னியாசகர் மற்றுமுள்ள பெரியோர்களுக்கு பெற்றோர் சங்க காரியதரிசியும் இப்பாடசாலை தலைமை ஆசிரியருமான திருவாளர்: T. M. வைகுண்டம் ஐயங்கார் அவர்களால் வந்தனோபசாரம் கூறி, பூமாலை, சந்தனம், வெற்றிலை பாக்கு, சிற்றுண்டி முதலியன வழங்கப்பட்டு கூட்டம் இனிது கலைந்தது.

மதிப்புரை

பதிப்பாளர் ரா. லோகநாதம் பிள்ளை (305, வால்டாக்ஸ் ரோடு, சென்னை.) அவர்களால் வெளியிடப்பட்டுள்ள, முதல் இரண்டு வகுப்புகளுக்குரிய "**இளைஞர் கணிதம்**" எனும் நூலும், முதல் ஐந்து வகுப்புகளுக்குரிய "**அருந்தமிழ் வாசகம்**" எனும் பாடபுத்தகங்களும் எமது பார்வைக்கு வந்தன. இவையனைத்தும் புதுப்பாடத்தின்படி நன்கு இயற்றப்பட்டிருக்கின்றன.

ஷை கணித புத்தக நூலாசிரியர் தமது புத்தகத்தில் காட்டியுள்ளபடி, உபகரணங்களைக் கையாடி, அப்பியாசங்களைக் கொடுத்து போதித்தால், இளைஞர்கள் கணிதத்தை வெகு விருப்பத்தோடு கற்றுக்கொள்ளுவது திண்ணம்.

இளைஞர்க்குத் தாய்மொழியில் விருப்பம் உண்டாக்கவல்ல புத்தகங்களில், ஷை "**அருந்தமிழ் வாசகம்**" போன்றவை வெகு சில. எனவே ஆரம்பப் பாடசாலைகளில் ஷை வாசக புத்தகங்கள் மூலமாய் தாய்மொழியில் போதிய அறிவை மாணவர்கள் பெறலாகுமென்பது எமது எண்ணம்.

பத்திராதிபர்.

கீழ்ப்படியாக் கோழிக்குஞ்சு

B. Thomas Victor, *Music Teacher*,

R. C. Training School, Trichinopoly.

நோட் மெட் 29.] [ஆதி தாளம்.

ஸ		ரி		க	ம		ப		த	–	நி

1. ஸ ஸ மா ஸஸ மா | கம தநி | தத தா |
செல் வந் தன் வீட்டி லோர் | பெட்டைக் கோழி | வாழ்ந்த து |

நிஸ் ரி ரி நி ஸ் ரிரி | தநி ஸ் நி | தக மா |
பல் வ கை நி றம் வாய் ந் த | குஞ்சு களு | டன்கூ டி. |

மற்ற அடிகளை இதே மாதிரி பாடவும்

2. தினம் தினம் கோழிதன் குஞ்சுகளுடன் ஓடி
தனவந்தன் தோட்டத்தில் வேண்டும் நல்லிரை தேடி
3. வரும் வழியில் தண்ணீர் வேட்கை தணித்திடவே
அருகிலமைந்த குளக்கரை சென்றிடும் நிதம்
4. தண்ணீர் பருகையில் தன் குஞ்சுகள் தவறாமல்
கண்மணி போலவைகளை கார்த்திடும் அத்தாய்க்கோழி
5. தாய் சொல் கேளா குஞ்சோர் தினம் தனித்தக்குளம் [சென்று
பாய்ந்தோடும் நீரைக்குடிக்க பள்ளத்தில மிழ்ந்தது
6. சற்று நேர மானபின் கோழிதன் குஞ்சைக் காணு
சுற்றி யோடிப் பார்த்திறுதியில் குளத்தை நோக்கிட
7. தண்ணீரில் மிதந்திடும் தன் குஞ்சைக் கண்ட கோழி
கண்ணீர் சொரிந்தேங்கி நின்றழுதது கவலையாய்
8. கற்றறியும் பாலர்காள் கேளுமிக் கதையதால்
பெற்றோர் சொற்கே ளாத வர்க்கு வருமே பெருங்கஷ்டம்.

ஆவணக் காப்பக நூலகம்
18457.
சென்னை-600 008

சந்தாதாரர்களுக்கும் ஏஜெண்டுகளுக்கும் அறிவிப்பு

சென்ற ஏப்பிரல் மாதம் 15-ம் தேதி வெளியான எமது "போதனுவிஷயப் பூங்கொத்து" ஏப்பிரல்-மே மாதங்களுக் குரியது. அந்த இதழிலேயே ஏப்பிரல்-மே மாதங்களைக் குறிப்பிட்டதோடு மலர் 10, 11 என்றும் எழுதப்பட்டிருப்பது நமது நேயர்கள் அறிந்த விஷயம். நமது "பூங்கொத்து" பாடசாலைகளுக்குரிய மாதப் பத்திரிகையாயிருப்பதனுலும், பாட சாலைகள் அநேகமாய் மே-மாதத்தில் வாவு நாட்களுக்காக மூடப் பட்டிருப்பதனுலும், "பூங்கொத்து" மே-மாதத்தில் வெளியாவ தில்லை. ஆகவே, மே-மாதம் தவிர மற்ற 11 மாதங்களிலும் "பூங்கொத்து" பிரசுரமாகிறது.

பத்திராதிபர்,
போதனுவிஷயப் பூங்கொத்து, திருச்சினுப்பள்ளி.

QUALITY BOOKS
For
Elementary, Middle and High School Classes

Apply To :—THE MADRAS PREMIER CO.,
EDUCATIONAL PUBLISHERS
3, Perianna Maistry Street,
G. T. Madras.

Easy Grammer & Oral Composition Books 1, 2 & 3
Bala Vachakam Books 1 to 8
Arithmetic Books 1 to 3
History of India for Standard V to Form III
Civics Books 1 & 2
Madras Presidency Geography.

DRILL BOOKS

சிறந்த சிறு விளையாட்டுகள்! உயர்ந்த விஷயங்கள்!!

ஆங்கிலத்திலும் எளிய தமிழ் நடையிலும் தயாரிக்கப்பட்டுள்ளன!!!

ஆரம்பப் பள்ளிக்கூடங்களுக்கு

இன்றியமையாதது

"PRINCIPLES AND GAMES"

(2 தனி புத்தகங்கள்)

இலாகாத்தாரின் சீர்திருத்த முறைப்படி புதுப் பாடத் திட்டத்திற்கேற்ற விளையாட்டுகளும், தேகப்பயிற்சிகளும், நவீன அபிநய விளையாட்டுகளும், (விவரணப்படங்களுடன்) அடங்கியுள்ளன.

இரு புத்தகங்களும் சேர்ந்து ரூ. 1-8-0-க்குக் கொடுக்கப்படும். தபால்கூலி பிரத்தியேகம். ஒரே தடவையில் 6 செட் புத்தகங்களுக்கு மேல் வாங்குகிறவர்களுக்கு தபால்கூலி இனாம். 12 செட் புத்தகங்கள் வாங்குகிறவர்களுக்கு 1 செட் புத்தகம் இனாம்.

ஏஜெண்டுகள் தேவை:
தக்க கமிஷன் உண்டு.

விலாசம்:—Mr. V. M. JOSEPH,
Author and Publisher,
R. C. Secondary Training School.
TRICHINOPOLY.

சிறுவர் அறிவுக் கதிர்
ESTD 1935
CHILDREN'S MAGAZINE
சிறுவர்களுக்கேற்ற சிறந்த மாதப் பத்திரிகை
வருட சந்தா உள்நாடு 1/2 அணா வெளிநாடு 1/4 ரூ.
டிபாஸிட் கட்டும் ஏஜண்டுகள் எங்கும் தேவை
சிறுவர் அறிவுக் கதிர் ஆபீஸ் ஈரோடு, S.I.RY.

"ஆரம்பக்கல்வி"

சுமார் 5 வருட காலமாக ஆரம்ப ஆசிரியர்களின் முன்னேற்றத்துக்கு உழைத்துவரும் ஓர் மாதாந்தரப் பத்திரிகை.

இதில் பாடசாலைகள் சம்பந்தமான அரசாங்க உத்தரவுகள், டைரெக்டர் சுற்றறிக்கைகள், கெஜட்டில் பிரசுரமாகும் கல்வி சம்பந்தமான செய்திகள், ஆசிரியர்களுக்கு மிக்க உபயோகமான பொதுச் செய்திகள், கட்டுரைகள் வெளிவரும்.

வருட சந்தா ரூ. 1—0—0. மாதிரிப் பிரதி இனாம்.

ஆரம்பக்கல்வி ஆபீஸ், 94, 95, புதுச்செருவு, மண்ணடி, மதராஸ்.

Reg. No. M. 1354.

THOMAS SPORTS

[Pro: I. PONNIAH PILLAI]

CLIVE'S HOUSE, TEPPAKULAM P. O.,

TRICHINOPOLY



OFFICIAL STOCKISTS FOR

SLAZENGER'S Ltd.

LONDON.

The CHEAPEST HOUSE FOR

Spalding Australian Dunlop American Fulcrum & Japan

TENNIS FRAMES

WE UNDERTAKE

RE-STRINGING & REPAIRING
RE-SHAPING & REGLUEING

WE MANUFACTURE THE BEST & GUARANTEED

NETS, BADMINTON BALLS IN ANY COLOUR IN ANY WEIGHT

A TRIAL IS SOLICITED

Your best Selection may be made at our Show Room.

Printed by Rev. Fr. A. Susai Regis,
Superintendent, St. Joseph's Industrial School Press, Trichinopoly.